# D E P O S I T I O N OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

CC.No.423/2023

OLD.No.1055/2014

P.W.5

| | |
|---|---|
| Name | : Tr.Sivasubramaniyan |
| Father/Husband Name | : S/o Sankarapandiyan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 13.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது தாம்பரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்துள்ளேன். வழக்கின் புகார்தாரர் எனது பெரியப்பா ஆவார். கடந்த 2013ம் ஆண்டு எனது பெரியப்பா என்னை அலைப்பேசியில் அழைத்து வீட்டிற்கு வெளியே பெரியம்மா அமர்ந்துயிருந்த போது அணிந்துயிருந்த தங்க தாலி சரடை யாரோ பறித்து சென்று விட்டதாக தகவல் சொன்னார். நான் நேரில் வந்து என்னவென்று பார்த்தேன். போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள். நான் தெரிந்தவற்றை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீஸ்சார் என்னை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். சுமார் 5, 6 மணிக்கு விசாரித்தார்கள். போலீஸ் விசாரணையில் எனது பெரியப்பா என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.

# D E P O S I T I O N   OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

CC.No.423/2023

OLD.No.1055/2014

P.W.4

| | |
|---|---|
| Name | : Tr.zavier |
| Father/Husband Name | : S/o Susai |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 13.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது நியூ காலணி குரோம்பேட்டையில் குடியிருந்து ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். நான் வேலை முடித்து வந்த போது போலீஸசார் ஊர் பெயர் விலாசம் கேட்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். இந்த வழக்கு பற்றிய மற்ற விவரம் தெரியாது. போலீஸ்சார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சார்பில் சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு சார்பில் குறுக்கு விசாரணை.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் எனது போலீஸ் விசாரணையில் 19.09.2013 அன்று மாலை 17.10 மணியளவில் நியூ காலணி 12 வது குறுக்கு தெரு வழியாக வந்துக்கொண்டிருந்தபோது அர்ஜுன் என்பவர் அவரது மனைவி அதே தெருவில் சென்றுயிருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரிய நபர்கள் 22 சவரன் தாலி சரடை அறுத்து சென்று விட்டதாக பதட்டத்துடன் இருந்தார் என்றும், அர்ஜுன் அளித்த புகாரின் அடிப்படையில் போலீஸ்சார் விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை- இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum

Judicial Magistrate,

Pallavaram.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

CC.No.423/2023

OLD.No.1055/2014

P.W.3

| | |
|---|---|
| Name | : Tr.Thavasi |
| Father/Husband Name | : S/o Kasamuthu |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 13.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது நியூ காலனி குரோம்பேட்டையில் குடியிருந்து தள்ளு வண்டியில் டிபன் கடை நடத்தி வருகிறேன். சமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எனது பக்கத்து வீட்டுக்காரர் வெளியே சென்றுயிருந்த போது செயின் அறுத்து விட்டார்கள் என்று ஓடி வந்தார். நான் ஓடி சென்று அக்கம் பக்கம் வந்து பார்த்த போது யாரும் இல்லை . போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாணை.**

எனது பக்கத்து வீட்டில் வசித்து வரும் நபர் பெயர் என்னவென்றால் அர்ஜுன் நாடார் என்பவர் ஆவார். சம்பவம் நடந்த தேதியன்று அர்ஜுன் நாடார் மனைவியை பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவதன்று கடையில் இருந்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும், நான் கடை வைத்துயிருக்கும் இடத்திற்கும் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் ஆம். சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆம். பக்கத்து வீட்டில் வரும் நபர் என்பதால் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள் என்றால் இல்லை. கையெழுத்து மட்டும் போட்டேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.